ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2182/12 - 2020 ජූනි මස 30 වැනි අඟහරුවාදා - 2020.06.30

*2182/12 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 15/ 2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 40 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 57 ஆம் பிரிவின்கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

பேராசிரியர் என். ரீ. சொஹான் விஜேசேகர,
தவிசாளர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்காகவும்
அதன் சார்பிலும்.

கொழும்பு,
*2020, யூன் 19.*

**விதிகள்**

1. இவ்விதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (ஒப்பந்தக்காரர்களைக் கண்காணிக்கும் முறைமை) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இரண்டாயிரத்துப்பதினான்காம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களைக் கண்காணிப்பதற்கான கண்காணிக்கும் முறைமையொன்று இருத்தல் வேண்டும்.

*3.* சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் ஒப்பந்தகாரரும், விதி 2 இன் கீழ் தாபிக்கப்படும் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பு முறைமைக்கு இணங்கியொழுகுதல் வேண்டும் ; இது, ஒரு நேரடியான, கைமுறையிலான அல்லது இணைய அடிப்படையிலான கண்காணிப்பு முறைமையாகப் பேணப்படுதல் வேண்டும்.

*4.* சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வோர் ஒப்பந்தகாரரும், பகல் நேரத்தின் போது அதிகார சபையின் அலுவலர்கள் அமைவிடங்களுக்கு விஜயம் செய்வதன் மூலம் தமது செயற்பாடுகளை நேரடியாகக் கண்காணிப்பதற்கு அவர்களுக்கு வசதியளித்தல் வேண்டும்.

5. சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டவரான, விடயத்துக்கேற்ப, ஒப்பந்தமொன்றின் ஒவ்வோர் ஒப்பந்தகாரரும், ஒவ்வோர் ஆலோசகரும் அல்லது பொறியியலாளரும் மற்றும் இயைபான தொழில்தருநரும், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் இணைய அடிப்படையிலான கண்காணிப்பு முறைமையை அணுகுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

*6.* தொழில்தருநர், ஆலோசகர், பொறியியலாளர் அல்லது ஒப்பந்தகாரர் உட்பட, ஓர் ஒப்பந்தத்துக்கான எல்லாத் திறத்தவர்களினதும் எல்லா உள்ளீடுகளையும், கருத்துக்களையும், பின்னூட்டியையும் கண்காணிப்பு முறைமையானது பயன்படுத்துதல் வேண்டும். அத்தகைய உள்ளீடுகளும், கருத்துக்களும், பின்னூட்டியும் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் கைமுறையிலான, நேரடியான மற்றும் இணைய அடிப்படையிலான கண்காணிப்பு முறைமையினூடாகச் சேகரிக்கப்படுதல் வேண்டும்.

7. ஓர் ஒப்பந்தகாரரின் செயல் நிறைவேற்றுகை, ஒப்பந்தகாரரொருவரின் மதிப்பிடுகையைக் கண்டறியும் நோக்கத்துக்காகப் பின்வருவனவற்றின் அடிப்படையில் வருடாந்தம் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும் :

(அ) வேலையின் தரம் ;
(ஆ) கருத்திட்டத்தைப் பூர்த்திசெய்வதற்கு எடுக்கப்பட்ட நேரம் ; அத்துடன்
(இ) ஆகுசெலவின் முகாமை.

*07-394*

---

*ச. வ. பி. 15/ 2014*

**2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டம்**

*2014 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, நிர்மாணத் தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 55(3) (ஐ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 57 ஆம் பிரிவின்கீழ் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையினால் ஆக்கப்பட்ட விதிகள்.*

பேராசிரியர் என். ரீ. சொஹான் விஜேசேகர,
தவிசாளர்,
நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்காகவும்
அதன் சார்பிலும்.

கொழும்பு,
*2020, யூன் 19.*

விதிகள்

*1.* இவ்விதிகள் 2020 ஆம் ஆண்டின் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி (அறிவுறுத்துவதற்கும் தகவல்களைக் கோருவதற்குமான தத்துவம்) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* (இதனகத்துப் பின்னர் இவ்வொழுங்குவிதிகளில் "அதிகார சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபை, பின்வருவன மீது காலாண்டு அடிப்படையில் தகவல்களை வழங்கும்படி ஓர் உள்ளூரதிகார சபையை அல்லது ஒரு நியதிச் சட்டமுறையான குழுவைத் தேவைப்படுத்துதல் வேண்டும் :

(அ) எந்தக் கருத்திட்டங்களுக்காக அனுமதிப்பத்திரத்துக்கான அல்லது உரிமத்துக்கான அங்கீகாரம் நாடப்பட்டுள்ளதோ அந்தக் கருத்திட்டங்கள் ;

(ஆ) நடைபெற்றுக் கொண்டிருக்கும் கருத்திட்டங்கள் ; அத்துடன்

(இ) பூர்த்திசெய்யப்பட்ட கருத்திட்டங்கள்.

*3.* இரண்டாம் விதியிற் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஒவ்வொரு நிர்மாணக் கருத்திட்டமும் பின்வரும் துறைகளின் கீழ் வகுதிப்படுத்தப்படுதல் வேண்டும் :

(அ) கட்டிடங்கள் ;
(ஆ) நீர் வழங்கலும் கழிவுநீர்க்கால் அமைப்பு முறையும் ;
(இ) பெருவழிகள் ;
(ஈ) பாலங்கள் ;
(உ) நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்புக் கால்வாய்கள் ;
(ஊ) சேறுவாருதலும் மீட்பும் ;
(எ) புயற்காற்று நீரை அகற்றுதலும் காணி வடிகாலமைப்பும் ;
(ஏ) கடலோர நிர்மாணம் ; அத்துடன்
(ஐ) குறித்துரைக்கப்பட்டவோர் இடப்பரப்பில் கனரக நிர்மாணம்.

*4.* மூன்றாம் விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட கருத்திட்டங்களுள் ஒவ்வொரு வகுதியின் கீழுமான ஒவ்வொரு கருத்திட்டத்தினதும் விபரங்கள், அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட வேண்டியவாறானவொரு படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்குதலும் வேண்டும் :

(அ) கருத்திட்டப் பெயரும் கருத்திட்டத்தின் அமைவிடமும் ;
(ஆ) வாடிக்கையாளரின் பெயர் ;
(இ) துறை ;
(ஈ) கருத்திட்ட வகை ;
(உ) கொள்திறன் அல்லது அளவு ;
(ஊ) கருத்திட்ட ஆகுசெலவு ;
(எ) நிதியளிக்கும் நிறுவகம் அல்லது முகவராண்மை ;
(ஏ) நிதியளிக்கப்பட்ட பெறுமதி ;
(ஐ) சூழல்சார் அங்கீகாரங்களின் செல்லுபடிக் காலப்பகுதி ;
(ஒ) அனுமதிப்பத்திரம் அல்லது உரிமம் எத்திகதியன்று வழங்கப்பட்டுள்ளதோ அத்திகதி ;
(ஓ) தொடக்கத் திகதி/எதிர்பார்க்கப்பட்ட தொடக்கத் திகதி ; அத்துடன்
(ஔ) கருத்திட்டம் பூர்த்திசெய்யப்படும் திகதி அல்லது பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி.

*07-395*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.